தமிழ் மொழிப்பெயர்ப்பு


මගේ අංකය / எனது இல. / My No. சுற்றுநிருபம் இலக்கம் – 05/2020

RG/MBD/1/சுற்றுநிருபம்

ඔබේ අංකය / உமது இல / Your No.

රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ.පෙ.අංකය / த.பெ.இல. / P.O.Box No.

234/ඒ3
ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත
බත්තරමුල්ල.
234/ஏ3 டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல
234/A3
Densil kobbakaduwa Mawatha
Battaramulla

දුරකතන අංක / தொலைபேசி இல / Telephone Nos 2889488 2889489

ෆැක්ස් අංක / தொலை நகல் / Fax No 2889491 2889492

ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail rgd@sltnet.lk

වෙබ් අඩවිය / இணைய தளம் / Web Site www.rgd.gov.lk


දිනය/திகதி/Date 2020.05.22

அனைத்து பிரதேச செயலாளர்களுக்கு / மாவட்ட பதிவாளர்களுக்கு,

மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கு.

<u>கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 03 மாதங்களுக்குள் பதிவு செய்ய இயலாத இறப்பினை பதிவு செய்வதற்காக இலகுவான முறைமையினை அறிமுகப்படுத்தல்.</u>

கொவிட் 19 உலகலாவிய தொற்று நிலைமை காரணமாக பொது கடமைகளில் இருந்து விலகியதன் காரணாக இறப்பினை உரிய கால எல்லையினுள் பதிவு செய்வதற்கு இயலாதுள்ளமை எனக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

02. ஆகையினால் இந்த தொற்று நிலைமை காரணமாக 2019.12.15 ந் திகதியின் பின்னர் நிகழ்ந்த பிறப்பினை முதல் மூன்று மாத காலத்தினுள் பதிவு செய்வதற்கு இயலாதவர்கள், பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் 36 வது பிரிவின் பிரகாரம் பிரதிக்கினை மூலம் காலங் கடந்த இறப்பினை பதிவு செய்துக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் பொழுது கீழ் குறிப்பிடப்பட்ட அத்தியாவசிய ஆவணங்களினை மாத்திரம் பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் பிறப்பினை உறுதி செய்து பதவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- I. 36 வது பிரிவின் கீழான பிரதிக்கினை (ப.செ. பி.15 மற்றும் CR 2 படிவம்)
- II. கிராம அலுவலரின் இறப்பு அறிக்கை (ப.செ.பி.24)
- III. வைத்தியசாலை இறப்பு அறிக்கை (ப.செ.பி.33)
- IV. தோட்ட அதிகாரியினால் வழங்கப்படும் தோட்ட இறப்பு அறிக்கை
- V. இறந்த நபரின் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம் (உதாரணம்- தேசிய அடையாள அட்டை, செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் போன்றன)

03. அதற்கிணங்க மேற்குறிப்பிடப்பட்ட II, III, IV ஆவணங்களில் ஒன்று மாத்திரம் மற்றும் V மூலம் காட்டப்பட்டுள்ள அடையாள ஆவணத்தினை கட்டாயம் பெற்றுக் கொண்டு உலகலாவிய கோவிட் 19 வைரசு தொற்று நிலைமை காரணமாக இந்த இறப்பினை மூன்று மாதங்களுக்கு இடையில் பதிவு செய்துக் கொள்ள இயலவில்லை என உறுதிப்படுத்தப்படுமாயின் 36 வது பிரிவின் கீழ் காலங்கடந்த இறப்பாக பதிவு செய்து வழங்குவதற்கு தேவையான கட்டளையினை வழங்குமாறு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. மேலும் இதன் கீழ் நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொழுது கிராம அலுவலரின் அறிக்கை போன்ற அத்தியாவசியமற்ற ஆவணங்களினை கோர வேண்டாம் எனவும் மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ என்.சீ.விதானகே

பதிவாளர் நாயகம்

என்.சி.விதானகே
பதிவாளர் நாயகம்
பதிவாளர் நாயகம் திணைக்களம்
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை

பிரதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - | தகவலுக்காக |
| 2. | அனைத்து மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகங்கங்கள் | - | தகவலுக்காக |
| 3. | அனைத்து வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள் | - | உரிய நடவடிக்கைக்காகவும் தகவலுக்காகவும் |
| 4. | தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் | - | தகவலுக்காக |
| 5. | மத்திய பதிவேட்டறையின் உதவி பதிவாளர் நாயகம் | - | தகவலுக்காக |
| 6. | அனைத்துக் காணிப்பதிவாளர்கள் | - | தகவலுக்காக |